
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

MONDAY, MARCH 4, 2024

திங்கட்கிழமை, 04 மார்ச் 2024 | ஒளி: 09 கதிர் 204 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# “எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்”

## ஜனாதிபதி ரணில் மீது சி.வி காட்டம்



அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த, ஏனைய சகல அதிகாரங்களையும் வழங்குவதற்குத் தனது அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வெளியிட்ட கருத்து நேர்மையானதல்ல. அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்தவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சி.வி. விக்கினேஸ்வரன் மேலும் கூறியிருப்பதாவது, இது வேடிக்கையாக உள்ளது. அரசாங்கம் தருவதற்கென எதுவுமில்லை. 13ஆவது திருத்தம் என்பது எமது நாட்டு அரசியலமைப்பின் ஓரங்கமாகும். அதனை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறிருக்கையில் அந்தவதிகாரங்களைத் தருவதாக ஜனாதிபதி கூறுவதன் மூலம் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் ‘சிங்களவர்களால் தெரிவுசெய்யப்பட்ட - சிங்களவர்களுக்கான சிங்கள அரசாங்கம்’ எனும் இனவாதப்போக்கிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்துவந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# 5 மாகாணங்களில் அதிக வெப்பம்

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, நாட்டில் ஐந்து மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் நிலவும் கடும் வெப்பமான காலநிலை காணப்படுவதாகவும், மனித உடலால் அதிகளவில் உணரக்கூடிய நிலை ஏற்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பாதிக்கும் என திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.



## ‘ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/25’
# விண்ணப்பம் கோரல் ஆரம்பம்

தற்போது பொருளாதாரத்தில் பின்தங்கிய 100,000 பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு, “ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/25” விண்ணப்பங்களை கோரியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தொடர்ச்சி P2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:
# நிலந்த ஜயவர்தனவை கைது செய்யுமாறு மனு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரும் தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த

தொடர்ச்சி P2

# “இறைமையை இந்தியாவுக்கு பலிகொடுகிறார் ஜனாதிபதி”



ஆட்சியில் இருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்தியாவுக்கெதிராக வாய் திறக்காது மௌனம் காப்பதாக குற்றஞ்சாட்டிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்

தொடர்ச்சி P2

## பாகிஸ்தான் பிரதமர்
# ஷெபாஸ் ஷெரீப்



பாகிஸ்தானில் கடந்த மாதம் 8ஆம் திகதி பல்வேறு கலவர சம்பவங்களுக்கு மத்தியில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

தொடர்ச்சி P2



# சாந்தனின் பூதவுடலுக்கு அணிதிரண்டு அஞ்சலி

## குடும்ப மயானத்தில் இன்று அடக்கம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், மரணமடைந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனப்படும் சாந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (03) தமிழ்த் தேசிய துக்க

தொடர்ச்சி P2

## சாந்தனின் உடல் தாங்கிய ஊர்தி
# சாரதியை கைது செய்ய முயற்சி

■ க.அகரன்

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில், சாந்தனின் உடல் தாங்கிய ஊர்தியினை வழி மறித்த போக்குவரத்து பொலிஸார் சாரதியை கைது செய்ய முயற்சித்தமையினால் அவ்விடத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



# விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பல சவால்களைக் கடக்க வேண்டியுள்ள போதிலும், விவசாய சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# “இது நாமலின் நேரம் அல்ல”

மொட்டுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை முன்வைத்தால், அவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட திறமையானவராக இருக்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்”

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை அடையாளம் காண்பது தொடர்பில் ஜனாதிபதி எம்முடன் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களை முன்னெடுத்தார். இருப்பினும் அவை கலந்துரையாடல் என்ற எல்லையைத் தாண்டவில்லை. மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அல்லது மீள வழங்கப்படவேண்டிய அதிகாரங்களைக் கண்டறிவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக இப்பணிகளை முன்னெடுப்பதற்கு விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிப்பதாகவும், மாகாண சபைகளுக்கு அவசியமான சட்டங்களை வகுப்பதாகவும் ஜனாதிபதி உத்தரவாதம் அளித்தார்.

எது எவ்வாறிருப்பினும் தற்போது ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து அரசியல் சார்ந்த தன்மையைக் கொண்டிருக்கின்றது. அவர் ஜனாதிபதி தேர்தலின்போது எமது மக்களில் குறிப்பிட்டதொரு தரப்பினரிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்கின்றார். ஆனால், வெற்றி பெற்றதன் பின்னர் அவர் கொண்டிருக்கும் கடப்பாட்டை மறந்துவிடுவார். முன்னைய ஜனாதிபதிகளும் இதனையே செய்தனர். அவர்களுக்குத் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் வேண்டும்.

பொலிஸ் அதிகார விவகாரத்தில் தமிழ் மக்கள் அவர்களுக்குள் பிளவுபட வேண்டுமென ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார். மாகாண சபைகளுக்கான வரையறுக்கப்பட்ட அளவிலான பொலிஸ் அதிகாரம் அரசியலமைப்பில் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் இறையாண்மையுடைய இரு தேசங்களுக்கு இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் விளைவாகும். எனவே, சட்டத்தில் இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி எவ்வாறு பேரம் பேசுகின்றார் எனப் புரியவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியின் கருத்து நேர்மையானதல்ல. மாறாக அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தைச் சமாதானப்படுத்த வேண்டும்.

அதேபோன்று ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். அதனைத் தாண்டி பொலிஸ் அதிகாரங்களுடனோ அல்லது பொலிஸ் அதிகாரம் இன்றியோ அவர் எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.



# “ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/25”க்கான

விண்ணப்பிக்க, விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் w facebook.com/president.fund என்ற ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் மற்றும் wpresidentsfund என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்கள் மற்றும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் அணுகலாம்.

gov.lk விண்ணப்பதாரர்கள் தங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலை தலைமையாசிரியர்களிடம் காலக்கெடுவிற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

வலய/மாகாணக் கல்வி அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கல்வி அமைச்சு விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையின் தலைமையாசிரியரும் தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பொறுப்பான குழுவிற்குத் தலைமை தாங்குவார், பிராந்திய மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையுடன். சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு அளவுகோல்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும், செயல்முறை முழுவதும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

விண்ணப்பங்கள் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்படக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சு தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுவோரின் பட்டியலை அவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விவரங்களுடன் அனுப்பியவுடன், ஜனாதிபதி நிதியம் ஏப்ரல் 2024 முதல் 12 மாதங்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் திட்டம் இலங்கையில் 10,126 பாடசாலைகளில் பரவியுள்ள 100,000 மாணவர்களுக்குத் தரம் 1 முதல் தரம் 11 வரையிலான ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முழு வேலைத்திட்டத்திற்காகவும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 3,600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வை நாடு முழுவதிலும் உள்ள சிறுவர்களுக்கான கல்விக்கான தொடர்ச்சியான அணுகலை உறுதி செய்வதாகும். சவாலான சூழ்நிலையில் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம், இலங்கையின் மனித மூலதனத்தை மேம்படுத்துவதில் முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# “இது நாமலின் நேரம் அல்ல”

பலவீனமான வேட்பாளரை முன்வைத்தால் அவரது கட்சி உறுப்புரிமை தொடர்பில் அவர் தீர்மானம் எடுக்க வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் நாமல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு இது சரியான தருணம் அல்ல எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் முன்னாள் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணிலைத் தவிர ஜனாதிபதி பதவிக்குப் பொருத்தமான வேறு யாரும் இல்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவளிப்பேன்.

ஆனால், அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார். நாமல் தம்பிக்கு இது நேரமில்லை. இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட, அவருக்கு இன்னும் கால அவகாசம் உள்ளது. எனவே, அவர் சரியான நேரத்தில் முன்வர வேண்டும். ரணிலை விடப் பலவீனமான வேட்பாளரை எங்கள் கட்சி நிறுத்தினால், நான் இந்தக் கட்சியில் அங்கம் வகிப்பதா? இல்லையா? என்பதை நான் அப்போது முடிவு செய்வேன். ஆனால், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் நான் போட்டியிட்டால் அது மொட்டுக் கட்சியிலிருந்து தான் போட்டியிடுவேன். 88/89 குருதியில் தோய்ந்த கொலைகார வரலாறு மாறிவிட்டது என்பதைக் காட்டுவதற்காக மக்கள் விடுதலை முன்னணி தனது பெயரைத் தேசிய மக்கள் சக்தி என்று மாற்றியது. பெயர் மாறினாலும் அவர்கள் மாறவில்லை. உண்மையான போராளிகள் பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்க போராடினார்கள். அவர்கள் வீடுகளுக்கு தீ வைக்கவில்லை.

மக்கள் கொலை செய்யப்படவில்லை. ஆனால் போராட்டத்தின் போது ஜேவிபி நடந்துகொண்ட விதத்தைப் பாருங்கள். அந்த நடத்தை உண்மையான போராட்டக்காரர்களுக்கு அவமானம். மினுவாங்கொடையில் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள், எனது வீட்டிற்கு தீ மூட்டுவதற்குத் தலைமை தாங்கியவர்கள் பின்னர் மினுவாங்கொடையில் நடைபெற்ற ஜே.வி.பி கூட்டத்தில் முதலில் பேசினார்கள். அப்படியிருக்க ஜே.வி.பி.க்கு இதில் சம்பந்தமில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு பேஸ்புக் அலை உள்ளது. இந்த நாட்டின் வர்த்தகர்களும் புத்திசாலி மக்களும் ஜே.வி.பிக்கு வாக்களிக்கவில்லை.

தவறுதலாகச் சரி அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால், அந்த அதிகாரத்தைக் காப்பாற்ற, அடக்குமுறையை அதிகபட்சமாகப் பயன்படுத்துவார்கள். ஆட்சியைப் பிடிக்கவும், ஆட்சியைத் தக்கவைக்கவும் மக்கள் விடுதலை முன்னணி எந்த முயற்சிக்கும் தயாராக உள்ளது. இதைப் பற்றி லால் காந்தா பகிரங்கமாகக் கூறியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# சாந்தனின் பூதவுடலுக்கு அணிதிரண்டு அஞ்சலி

தினமாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பெரும்பாலான இடங்களில் தமிழ்த் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேவையற்ற களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்து சாந்தனிற்கு அனைவரும் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தக் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை (03) காலை 8 மணிக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த சாந்தனின் பூதவுடல் தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு 9.00 மணிக்கு எடுத்து வரப்பட்டது. காலை 10.30 மணிக்குக் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம் - நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்கு எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை தீருவிலில் பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிவரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

மாலை அவரது வீட்டுக்கு எடுத்து வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள பூதவுடல் அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் இன்று திங்கட்கிழமை (04) அடக்கம் செய்யப்படும்.

(மேலதிக செய்தி 3ஆம் பக்கத்தில்)

## சாரதியை கைது செய்ய முயற்சி

சாந்தனின் உடல் வவுனியாவிற்கு ஞாயிற்றுக்கிழமை(03) காலை எடுத்து வரப்பட்டது. இதன்போது உடலைத் தாங்கிய ஊர்தி வவுனியா பழைய பேருந்து நிலையத்தினுள் உள்நுழைந்தது.

அங்குக் கடமையில் இருந்த பொலிஸார்ஊர்தி அருகே சென்று ஊர்தியினை இவ்விடத்தில் தரித்து நிறுத்த முடியாது. அவ்வாறு தரித்து நிறுத்தினால் சாரதியினை கைது செய்வோம் என கூறினர்.

சாரதியினையும் வாகனத்தினை விட்டு கீழே இறங்குமாறு தெரிவித்தனர். இதனால் அவ்விடத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

அதன் பின்னர் ஏற்பாட்டுக் குழுவினர் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வாகன தரிப்பிடத்தில் ஊர்தியினை தரித்து நிறுத்தி அஞ்சலி நிகழ்வினை மேற்கொண்டிருந்தனர்.

# விவசாயிகளின் பிரச்னைகளைத்...

பயிர்கள் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட, போட்டித் தன்மைமிக்க விவசாயக் கைத்தொழில் துறையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவின் அழைப்பையேற்று சனிக்கிழமை (02) தம்லகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவின் கலமெடியாவ கிராமத்தின் நெல் அறுவடையைக் கண்காணிக்கச் சென்றிருந்த வேளையிலேயே ஜனாதிபதி ரணில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பிரதேச மக்கள் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதி ரணிலி கூறியுள்ளனர். அந்த பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு உரிய அதிகாரிகளை ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இப்பிரதேச விவசாயிகள் தமது விளைச்சலுக்கு போதிய நீர் கிடைப்பதில்லை என்றும் அதனைப் பெறுவதற்கான கால்வாய் ஒன்று இல்லாமல் இருப்பதையும் விவசாய நிலங்களைப் பாதுகாக்க யானை வேலியை அமைத்துத் தருமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

அதற்காக வெண்டர்சன் குளம் தொடக்கம் புலியுத்துகுளம் வரையான ஒன்பது ஏரிகளுக்கும் நீர் அனுப்பக்கூடிய வகையில் கால்வாய் அமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு போதிய நீரைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் விவசாய செயற்பாடுகளை மையப்படுத்தி அதனை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், தம்பலகமுவ பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட 94ஆவது பிரிவு முதல் பாலம் வரையான யானை வேலி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் வரையில் வீதி விளக்குகளை பொருத்துமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# “இறைமையை இந்தியாவுக்கு...

பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, நாட்டின் இறைமையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தியாவுக்குப் பலி கொடுக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

‘பொரலுகொட சிங்கங்கள் - ராஜபக்ஷ பொஹொட்டுகாரர்களை’ பாராட்டி, “நாட்டின் இறையாண்மையை இந்தியாவிற்குத் தியாகம் செய்யும்” பணியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அற்புதமாக செய்து வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

9க்குப் பின் இலங்கையின் கதி?’ என்ற தலைப்பில் பாதுக்க வீரகலவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரு நாடாகச் சுதந்திரம் அடைந்ததில் இருந்து மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் அதே வேளையில், நெருக்கடியைச் சரியாகச் சமாளித்தால், ஒரு நாடு முன்பை விட சிறப்பாக எழுச்சி பெறும்.

அப்போதைய இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள் தேடும் பணியை இந்தியாவின் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங்கிடம் ஒப்படைத்தார்.

இந்தியாவின் சரியான பயணத்தின் பலனாக இந்தியா இன்று உலகின் ஐந்தாவது பொருளாதார சக்தியாக மாறியுள்ள போதிலும் ரணில் விக்ரமசிங் தலைமையிலான அரசாங்கம் வழங்கிய பரிகாரங்கள் நாட்டையே குழிதோண்டிப் புதைக்கும் வகையான பரிகாரங்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கையில் சிறையில் இருக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவு வேட்பாளர்கள் பல்வேறு இடங்களைக் கைப்பற்றிய போதும் முழு ஆதரவு கிடைக்கவில்லை.

அதேபோல், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் கணிசமான தொகுதிகளைக் கைப்பற்றின.

இதையடுத்து, தொடர் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -நவாஸ் மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து கூட்டணி ஆட்சியின் பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் (Shehbaz Sharif) தெரிவு செய்யப்பட்டார்.

கூட்டணி ஆட்சி அமைவது உறுதியான நிலையில் 33ஆவது பிரதமராக பாக். முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியின் தலைவர் ஷெபாஸ் ஷெரீப் இன்று பதவி ஏற்கவுள்ளார்.

பிரதமரைத் தொடர்ந்து பாராளுமன்ற சபாநாயகர், துணை சபாநாயகர் உள்ளிட்டோரும் தேர்வு செய்யப்பட உள்ளனர். பிரதமர், சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்வைத் தொடர்ந்து அதிபர் மாளிகையான ஐவான்-இ-சதரில் நடைபெறும் விழாவில் புதிய பிரதமர் பதவியேற்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

தொடர் கலவர சம்பவங்களுக்கு மத்தியில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் பாக்.முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சி முழு பெரும்பான்மையைப் பெறத்தவறினாலும் மொத்தமுள்ள 265 இடங்களில் 75 இடங்களைப்பெற்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -நவாஸ் மற்றும் பாகிஸ்தான்

# நிலந்த ஜயவர்தனவை கைது செய்யுமாறு மனு

ஜயவர்தனவை கைது செய்து குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் தனது 20 வயது மகனை இழந்த சுராஜ் நிலங்க, சமூக மற்றும் அமைதிக்கான மையம், அதன் பணிப்பாளர் ஜூட் வர்ண ரொஹான் சில்வா ஆகியோரால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர், பிரதி பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதலுக்கு நிலந்த ஜயவர்தன நேரடியாகப் பொறுப்பேற்றார் என்பது விசாரணையில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களில் தெரியவந்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராகப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாக மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட குழு வழங்கிய தீர்ப்பில், நிலந்த ஜயவர்தன தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறுகிறது.

அதற்காக ஜயவர்தனவுக்கு 75 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எவ்வாறாயினும், நிலந்த ஜயவர்தனவைகைதுசெய்யவோ அல்லது அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவோ போதிய உண்மைகள் இருந்தும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரச புலனாய்வுப் பிரிவின் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு, ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி செயற்படுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

# “நாட்டு மக்களின் வாழ்க்கை சீரழிந்தாலும் அரசிடம் பதில் இல்லை”

பால் தேநீர், தின்பண்டங்கள், சிற்றுண்டிகள், சாப்பாட்டுப் பொதிகள், கொத்து போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. 24 மணி நேரமும் 365 நாட்களும் நாட்டில் விலை அதிகரிப்பு கலாசாரமே இருந்து வருகிறது. விலைவாசி உயர்ந்து, மக்களின் வாழ்க்கை சீரழிந்தாலும், அரசிடம் இதற்கான பதில் இல்லை. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளிநாடு முழுவதும் விஜயங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் 117ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, ஓயாஹவ, ராவணவெவ கனிஷ்ட கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (03) கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, ரணசிங்க பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டத்தின் பின்னர், நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுக்கொள்ளும் உள்நாட்டுச் சர்வதேச அளவிலும் இன்னும் எந்தத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு போகும் போக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் 100 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டாலும் டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எமது நாட்டால் மின் உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. அரசாங்கம் எவ்வளவு தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அரசாங்கம் எப்போதும் மக்கள் மீது சுமைகளை ஏற்றி ஆட்சியாளர்கள் மனிதாபிமானமற்ற வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அதிநவீன மூலோபாய திட்டத்தின் மூலம் டொலர்களை கொண்டு வரும் திட்டத்தைச் செயல்படுத்தப்படும்.



இதன்போது, வங்குரோத்து என்ற இந்த மரண வலையிலிருந்து வெளியேறப் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டும். அதற்காக உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நேரத்தில் அரசாங்கம் பொருளாதாரத்தைச் சுருக்கி வருகிறது. மின்கட்டண அதிகரிப்பால் புதிய முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரமாட்டார்கள் என இங்கு குறிப்பிட்டுள்ளார்.



# சாந்தனின் உடலுக்கு அஞ்சலி

இந்தியாவின் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து, விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், உடல் நலக்குறைவால் காலமானார்.

அவரது உடல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு பிரேதப் பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை முடிவின் பின்னர் அவரது உடல் வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வவுனியா முன்னாள் போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் அலுவலகத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (03) காலை 7.30 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் சாந்தனின் உடல் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பின்னர் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

அத்துடன், வடக்கிலும் பல இடங்களில் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.








மூத்த ஊடகவியலாளர்

## லூசியன் ராஜகருணாநாயக்கவின் உடல் நல்லடக்கம்



மூத்த ஊடகவியலாளரும் கட்டுரையாளருமான லூசியன் ராஜகருணாநாயக்க (Lucien Rajakarunanayake) பெப்ரவரி 29ஆம் திகதி தனது 85ஆவது வயதில் காலமானதையடுத்து,

அவரது பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (03) மாலை 4.30 மணிக்கு பொரளை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

மறைந்த ஊடகவியலாளரான ராஜகருணாநாயக்க 1960ஆம் ஆண்டு முதல் 1971ஆண்டு வரை (முன்னாள்) டைம்ஸ் ஆஃப் சிலோன் மற்றும் சண்டே டைம்ஸ் ஆகியவற்றில் செய்தியாளராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இணைந்துகொண்ட அவர், 1972-2001ஆம் ஆண்டுகளுக்கு இடையில் சண்டே டைம்ஸ், சண்டே ஐலண்ட், தி சண்டே லீடர் மற்றும் சண்டே அப்சர்வர் ஆகியவற்றில் கட்டுரையாளராக இருந்துள்ளார்.

அவரது மறைவின் போது, தி ஐலண்ட் மற்றும் டெய்லி நியூஸ் (சனிக்கிழமைகளில்) கட்டுரையாளராக இருந்து வந்துள்ளார்.

சிலோன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் (ANCL - லேக் ஹவுஸ்) தலைவராகவும் இருந்த அவர், 1990களில் சுதந்திர ஊடக இயக்கத்தின் உறுப்பினராக முக்கியப் பங்கு வகித்துள்ளார்.

பத்திரிகையின் அனைத்து அம்சங்களிலும் 50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், அவர் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிருபராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



## வீதி விபத்தில் பெண் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி - கொழும்பு வீதியில் ஞாயிற்றுக்கிழமை (3) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


வெலிகந்தை - குடாப்பொக்கனை பகுதியிலிருந்து கணவன், மனைவி இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறாவூர் பகுதிக்குச் சென்று மீண்டும் ஊர் திரும்பிக் கொண்டிருந்தபோது நாய் ஒன்று குறுக்கே பாய்ந்ததால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இவ்விபத்தில், குடாப்பொக்கனை பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய அப்துல் ஹமீத் ஜெமீலா என்பவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளதுடன், அபூபக்கர் முகம்மது இப்றாகீம் என்பவர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், உயிரிழந்த பெண்ணின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீர் நிறுத்தப்பட்டமையால் விவசாய நிலம் பாதிப்பு

க. அகரன்



வவுனியா - பாவற்குளத்திலிருந்து நெற்செய்கைக்கான நீர் திறந்துவிடப்படாமையினால் அதன் கீழ் செய்கை பண்ணப்பட்ட 125 ஏக்கர் வயல் நிலம் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா - பாவற்குளம் பெரிய நீர்பாசனத்திட்டத்தின் கீழ் இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிற்கு மாசிமாதம் 15ஆம் திகதி வரை நீர் திறந்து விடப்படுவதாக விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, குறித்த காலப்பகுதியில் திறக்கப்பட்ட நீர் நிறுத்தப்பட்டு குளம் மூடப்பட்டது.

இந்நிலையில், கடந்தவருட இறுதியில் மழைவெள்ளம் காரணமாகத் தாமதமாக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த விவசாயிகள், கடந்தவருட இறுதியில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக அழிந்து போன எமது காணிகளில் மீளவும் விதைப்பில் ஈடுபட்டிருந்தோம். அத்துடன், குளம் தொலைவில் இருப்பதால் எமது வயலுக்கு நீர் வருவதிலும் தாமதம் ஏற்றப்பட்டது. இதனால் விதைப்பு நடவடிக்கைகளைப் பிந்தியே முன்னெடுக்கவேண்டி ஏற்பட்டது. தற்போது எமது பயிர்கள் குடலைப்பருவத்தினை எய்தியுள்ள நிலையில் நீர் திறந்துவிடப்படாமையினால் அவை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை, குளத்தில் போதிய அளவு நீர் இருக்கின்றது. அதனைத் திறந்துவிடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## கறுப்புக்கொடி போராட்டம்

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை மீனவர்கள், இந்திய இழுவைப் படகுக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை (03) கறுப்புக்கொடி போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர் .

இந்திய இழுவைப் படகுகள் தொடர்ச்சியாக எல்லை மீறி வந்து இலங்கை மீனவர்களது வளங்களை அழித்து வருகின்றனர். இந்நிலையில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள்,



இந்திய - இலங்கை கடல் எல்லைக்குச் சென்று கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.


மேலும் மீனவர்களது பாதுகாப்பு கருதி ராமநாதபுரம் மீனவர்களுக்கான அனுமதிச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## தங்கக்கலையில் குளவியால் எழுவர் பாதிப்பு

தலவாக்கலை- லிந்துலை, தங்கக்கலை தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) காலை 9 மணி அளவில் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 5 பெண்கள், 2 ஆண்கள் என மொத்தமாக ஏழு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாற்று மருத்துவ முறைகளையேனும் அரசாங்கம் முறையாக நெறிப்படுத்துமா?

ஆங்கில மருத்துவ முறைமையில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அண்மைக் காலத்தில் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியது. குறிப்பாக தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி தொடர்பில் நாட்டில் உயிரிழப்பு சம்பவங்களுடன், பல்வேறு சுகாதாரப் பிரச்சனைகள் எழுந்திருந்த நிலையில், அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் செல்வோரில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இந்நிலையில், நாட்டில் காணப்படும் சுதேச வைத்திய முறைகளின் மீது மக்களின் நாட்டம் அதிகரித்துள்ளது.

ஆங்கில மருத்துவ முறைமையை விடச் சுதேச வைத்திய முறைகளில் நோய் குணமடைய நீண்ட காலம் எடுத்துக் கொண்ட போதிலும், அவற்றில் பக்க விளைவுகள் இன்மை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்ற மாற்று முறைமைகளை நாடுவதில் மக்கள் அதிகம் கவனம் செலுத்தி வரும் நிலையில், இந்த மருத்துவ முறைமைகள் நாட்டில் ஒழுங்காக நெறிப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுவது அவசியமானதாகும்.

குறிப்பாக இந்த வைத்திய சிகிச்சைகளில் ஈடுபடும் வைத்தியர்கள் முறையான தகைமை பெற்றுள்ளவர்களாக என்பது தொடர்பில் மக்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தற்போது சமூக வலைத்தளங்களில் பெருமளவு விளம்பரங்கள் இடப்பட்டு, மக்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படும் நோய்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுவதாகவும், நோய் குணமடையாவிடின் பணம் மீளளிக்கப்படும் என்றவாறான விளம்பரப் பதிவுகளைக்கூடக் காண முடிகின்றது. இவ்வாறான விளம்பரங்களைக் கண்காணிப்பதற்கு அல்லது அவற்றை அங்கீகரிப்பதற்கு ஒரு பொறிமுறை அவசியம்.

சுகாதார அமைச்சு, சுதேச வைத்திய அமைச்சு போன்றன இந்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய கட்டாய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான விளம்பரங்களில் பதிவிடப்படும் விடயங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்கு ஏதேனும் வழிமுறையை இந்த அமைச்சுகள் அறிமுகம் செய்ய வேண்டும்.

குறிப்பாக மருந்துப் பொருட்களின் தரம், தன்மை, அவற்றை வழங்குவோர் உரிய தகைமை கொண்டுள்ளவர்களா? அவற்றை நெறிமுறைப்படுத்தும் முறைமைகளை இந்த உரிய அமைச்சுகள் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் இவை மக்களின் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளாகும்.

மருந்துப் பொருட்கள் இறக்குமதி தொடர்பில் சுகாதார அமைச்சில் நடைபெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர், செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில், கடந்த வாரம் ஹோமியோபதி வைத்திய முறைமையிலும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து செய்திகள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக ஹோமியோபதி முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு தகைமை வாய்ந்த மருத்துவ சபை இன்மை தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. போலியான வைத்தியர்கள், கட்டுக்கடங்காத விலைகளில் மருந்துகளை வழங்கல், வைத்தியர் பதிவுகளில் சிக்கல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இது போன்ற பிரச்சனைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு உடனடியாக கவனம் செலுத்தி, அவற்றுக்கு சுமூகமான தீர்வை காண்பது, நாட்டு மக்களுக்குப் பயனளிப்பதாக அமைந்திருக்கும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள்.

அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து,

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

நன்றி -பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியினை புனரமையுங்கள்!

முல்லைத்தீவு-சுதந்திரபுரம் வீதியினை புனரமைக்குமாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு சாலையில் சுதந்திரபுரம் சந்தியில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரம் சுதந்திரபுரத்திற்கான முதன்மை வீதி நீண்டு செல்கின்றது. 900 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் 2011ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் நடைபெற்ற போது கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்டது.

வேலையினை பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்கள் வேலையினை செய்யாததன் காரணமாக தற்போது குறித்த கொங்கிறீட் வீதி பல இடங்களில் சேதமடைந்து குன்றுங்குழியுமாக வீதி காணப்படுகின்றது. குறித்த வீதியினை புனரமைக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் வீதி புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

குறித்த வீதியினை புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சுதந்திரபுரம் கிராம மக்களின் வேண்டுகையாக உள்ளது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# உளப்பூர்வமான உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கம்?

லக்ஸ்மன்

நாம் தருவதாகத்தான் சொல்கிறோம். அவர்களுக்குத்தான் விருப்பமில்லை என்கிற தோரணைகள்தான் இப்போது இலங்கையிலிருக்கிறது. அவசர அவசரமாக நடைபெறுகின்ற பல முயற்சிகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இலங்கையின் செயற்பாடுகளின் மும்முரம் ஒவ்வொரு வருடத்திலும் மார்ச், ஒக்டோபர் மற்றும் செப்டெம்பர்களை இலக்கு வைத்து நடைபெறுவது வழக்கம். அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதிலொன்றுதான் முதலில் காட்சிக்கு வந்திருக்கும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம். உண்மையில் நாட்டின் அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமலேயே புதிய சட்டங்களையும், திருத்தங்களையும் ஏற்படுத்தும் நாடு நமது நாடாகத்தான் இருக்கவேண்டும் என்பதனை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினை தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அமுல்படுத்த முனையாது தன்னுடைய தந்திரத் தனத்தினைப் பயன்படுத்தி காலங்கடத்தி வருகிறார். இதுவும் நாம் அடைந்த ஏமாற்றங்களில் ஒன்றாக மாறும் என்ற குற்றச்சாட்டு கடந்த வருடங்களில் தமிழ் அரசியல் தரப்பினால் முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கேற்றாற்போல் ஒரு கருத்தைக் கடந்த வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்டிருந்தார். நல்லிணக்கத்துக்கான மதங்கள் எனும் தொனிப்பொருளில் தேசிய சமதானப்பேரவை நடத்திய நிகழ்வில் பேசிய ஜனாதிபதி பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்து 13ஐ அமுல்படுத்துவதற்குத் தயார். அடுத்த வாரத்தில் தமிழ் முஸ்லிம் தரப்புகளுடன் பேசுவேன் என்று தெரிவித்திருக்கிறார். இது ஒருவகையில், தேர்தலை இலக்காகக் கொண்ட கருத்து என்று விமர்சனம் முன்வைக்கப்பட்டு வருகிறது. எது எவ்வாறிருந்தாலும், 13இல் பொலிஸ் அதிகாரத்தை நீக்குவது தொடர்பிலான பிரேரணை ஒன்றை உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கிறார். ஜனாதிபதியின் கருத்து இதனையே தொட்டு நிற்கிறது என்பதே உண்மை. இந்த இடத்தில் கழுதை தேய்ந்துதான் கட்டெறும்பானதாக உவமைகள் உள்ளன. கழுதையைத் தேய்த்துக் கட்டெறும்பாக்கும் கதைதான் 13 விடயத்தில் காணப்படுவதாக நாம் சொல்லிக் கொள்ளமுடியும்.

அதாவது, அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குச் சரியான அங்கீகாரங்கள் வழங்கப்படவில்லை. ஆளுநர்களைக் கொண்டு பல விடயங்கள் தடுக்கப்பட்டே வருகின்றன. வடக்கு கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்டது. இப்போது பொலிஸ் அதிகாரத்தை நீக்க முயற்சிக்கப்படுகிறது. காணி அதிகாரம் இல்லை. நியதிச்சிட்டங்களை உருவாக்குவதில் சிக்கல், என்றால் அதன் அர்த்தம் அவ்வாறு கழுதையைத் தேய்த்து கட்டெறும்பாக்குவதாகத்தான் கொள்ளமுடியும்.

இந்த இடத்தில் தான், இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு அங்கமாக இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதில் இத்தனை வருடகாலமாக அரசாங்கம் ஏன் முழுமையான அக்கறையைச் செலுத்தவில்லை என்பது கேள்வியாகவே இருந்து வருகிறது.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளான மொழி, பல்கலைக்கழக அனுமதி, இனக்கலவரம், சிங்கள குடியேற்றம் போன்றவைகள் தமிழ்-சிங்கள மக்கள் இடையே மோதல்களுக்குக் காரணமாக இருந்தன. 1956ஆம் ஆண்டு பிரதமராகப் பதவி வகித்த டட்லி சேனாநாயக்க பதவி விலகிய பின் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தார். தமிழர்களின் மொழி மற்றும் பண்பாட்டிற்கு அச்சுறுத்தல் விடுப்பதாகவே இது அமைந்தது.

இதனால் தமிழர்கள் அறவழிப் போராட்டங்களுக்கு வழிசமைக்கப்பட்டதையடுத்து, பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிற்கும், தந்தை செல்வநாயகத்திற்கும் இடையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. பிக்குகள், எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களால் இந்த ஒப்பந்தம் இல்லாது போனது. அந்தவகையில், தமிழ் - சிங்கள மக்களிடையே இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு முதலாவது காரணியாகத் தனிச் சிங்கள சட்டமே அமைந்தது.

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இந்திய நாட்டின் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்குத் தீர்வாக இந்த மாகாணசபை முறைமை அமையும் என்ற நம்பிக்கை அப்போது அரைகுறையாகவே காணப்பட்டது. காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கும் வகையில் வடக்கு, கிழக்கை இணைத்து 8 மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

வடக்குக் கிழக்கு மாகாண சபையைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் அதன் முழுமையான நடைமுறைப்படுத்தலின்மை காரணமாகவே அன்றைய முதலமைச்சர் வரதராஜபெருமாள் அவர்கள் தமிழீழத்தினைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்குச் சென்றார்.

மாகாண சபை முறையின் ஊடாக, காணி, நிதி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், மத்திய அரசாங்கமானது இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை வழங்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாக இருந்தாலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து வடக்கு கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் 2007ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரித்து உத்தரவு பிறப்பித்தது.

13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாது இருந்தபோதும், பல குறைபாடுகளுடன் வடக்கு கிழக்கு தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டு அந்த மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. இரு சபைகளும் கலைக்கப்பட்டுப் பல வருடங்கள் கடந்த பின்னரும் தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால், ஆளுநர்களின் அதிகாரத்தின் கீழே இச்சபைகள் இரண்டும் இப்போது இயங்கி வருகின்றன.

2009ஆம் ஆண்டில் தமிழர்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி 13 பிளஸ், பிளஸ் வழங்கப்போவதாக இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் வாக்குறுதியளித்தார். ஆனால், அதுவும் நடைபெற்றிருக்கவில்லை. இப்போதும் காலங்கடத்தல்களுக்கான முயற்சிகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனாலும், இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பில் வேரூன்றிய சட்டவிதிக் கூறுகளைக் கொண்டுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாகச் சமஷ்டியைக் கோரும் தமிழர்கள் 13யேனும் அரசாங்கம் வழங்கும், அதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்பதே நிதர்சனம்.

இருந்தாலும், ஒற்றையாட்சி முறையின் கீழுள்ள இலங்கை அரசு மாகாண அரசின் ஊடாகவோ அன்றேல் மத்தியும் மாகாணமும் ஒத்துப்போகக்கூடிய வகையில் அமுலாக்கப்படக்கூடிய எந்த அதிகாரப் பரவலாக்கல் மூலமாகவோ, வடக்குக் கிழக்கு மக்களுக்காகத் தீர்வு வழங்கப்படாது என்ற நிலைப்பாட்டுடன் தமிழர்களின் ஒருதரப்பினர் உள்ளனர். இவ்வாறிருக்கையில்தான் நாட்டின் சிங்களப் பெரும்பான்மையானது இனவாதச் சிந்தனையுடன் 13ஐக் கூட முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்து விலகிச் சென்ற வண்ணமேயிருக்கிறது. இது இலங்கையில் உண்மை, ஒற்றுமை நல்லிணக்கத்திற்கு வழி சமைக்காது என்பது மாத்திரமே கள யதார்த்தம். அப்படியானால், எதுவுமே நடைபெறாது, முயற்சிப்பதில் பயனில்லை. எதுவும் நடந்துவிட்டுப் போகட்டும் என்ற அலுத்துச் சலித்துப் போன மனோநிலைக்குத் தமிழர்கள் செல்வதில் தவறேதுமில்லை எனலாம். ஆனாலும் தமிழர்கள் தங்களது சுயநிர்ணயப் போராட்ட முயற்சிகளைக் கைவிடா நிலைப்பாட்டை மாத்திரமே கொண்டிருக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்துமில்லை.

இந்த இடத்தில், ஒருபோதும் தமிழர்கள் சிறிதளவேனும் அதிகாரத்தினைப் பெற்றுவிடக் கூடாது என்ற சிந்தனையுடன் இருக்கின்ற பெரும்பான்மைச் சமூகத்தினருடன் உடன்பாட்டை எட்ட முயற்சிப்பது பயனைத் தருமா என்பதே இப்போதும் கேள்வி.

இந்தக் கேள்வி தொடர்வதாகவே இருக்குமானால் நல்லிணக்கம் என்ற கற்பனையான, மாயையான பேச்சுகள் எதற்கானது என்ற தொக்கலே இருந்து கொண்டிருக்கும்.

# சுகாதார பராமரிப்பு உதவியை ஜப்பான் வழங்கியது

வைத்தியசாலைகளில் காணப்படும் மின்வலுப்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கு அவசியமான 40,000 மெட்ரிக்டொன் டீசலை, இலங்கைக்கான ஜப்பானிய தற்காலிக தூதுவர் கட்சுகி கொடாரோ கையளித்திருந்தார்.

நோயாளர்கள், மருந்துப்பொருட்கள் மற்றும் சிகிச்சைகளுக்காக கொண்டு செல்கை போன்ற போக்குவரத்து வசதிகளிலும் இந்த எரிபொருள் பயன்படுத்தப்படும்.

இந்தநிகழ்வில் சுகாதார அமைச்சர் கலாநிதி. ரமேஷ் பத்திரன மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர். பி.ஜி. மஹீபால ஆகியோர் கலந்து கொண்டு, இரு நாடுகளுக்குமிடையிலான உறுதியான பிணைப்பை வெளிப்படுத்தியதுடன், இலங்கையில் சுகாதார பராமரிப்பு உட்கட்டமைப்பு வசதியை உறுதிசெய்வதற்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இலங்கையின் வலு நெருக்கடிக்குத் தீர்வை வழங்கும் வகையில், ஜப்பானிய அரசாங்கத்தினால் 5 மில்லியன் யென் மானிய உதவி இலங்கையின் சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கு டீசல் வழங்க அறிவிக்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட டீசல் அவசர சிகிச்சை வாகனங்களில் பயன்படுத்தப்படும் முதல் தினமாக இன்று அமைந்திருந்தது. இன்றைய நிகழ்வுக்கு முன்னதாக, தூதுவர் மிசுகொஷி மற்றும் இலங்கையின் சுகாதார மற்றும் துறைமுக அமைச்சர்கள், பெப்ரவரி 19ஆம் திகதி எரிபொருள் வருகையை ஏற்று வரவேற்றிருந்தனர்.



பதில் தூதுவர் கட்சுகி தமது உரையில், "இந்த எரிபொருள் தொகை,இலங்கை முழுவதிலும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதுடன், அதனூடாக பரந்தளவு சமூகத்தார் நலன்பெறுவர். இலங்கையின் சுகாதார பராமரிப்பு உட்கட்டமைப்பை வலிமைப்படுத்துவதில் இந்த ஆதரவு பெருமளவில் கைகொடுக்கும் என நாம் கருதுவதுடன், அதனூடாக நாட்டு மக்களின் நலனை மேம்படுத்தும்." என்றார்.

இந்த எரிபொருள் வருகையினூடாக எதிர்பார்ப்புகள் மற்றும் முன்னேற்றத்துக்குப் பங்களிப்பு வழங்கப்படும். நோயாளர் காவு வண்டிகளுக்கு எரிபொருள் வழங்கவும், நாடு முழுவதிலும் சுகாதார பராமரிப்பு வசதிகளின் மிருதுவான செயற்பாட்டுக்கும் பங்களிப்பு வழங்கப்படும். நாம் வரவேற்று, ஒன்றிணைந்து கொண்டாடும் முன்னேற்றமாக இது அமைந்துள்ளது.

# கொமர்ஷல் வங்கி இரட்டை கௌரவிப்பைப் பெற்றது







கொமர்ஷல் வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையானது பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தினால் (ACCA) அண்மையில் வழங்கப்பட்ட நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகளில் வங்கிப் பிரிவில் ஒட்டுமொத்த இரண்டாம் நிலை மற்றும் கூட்டு வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டது.

கொமர்ஷல் வங்கிக்கு ஒட்டுமொத்த இரண்டாம் நிலை விருதை வழங்கிய ACCA நடுவர்கள் 'இந்த கடினமான பொருளாதார சவால்களின் மத்தியிலும் பெரும் இடரினை நோக்கிய சமூகத்தின் மீது அக்கறை காட்டும் வகையில் அதன் வர்த்தகத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த அறிக்கையை வங்கி சமர்ப்பித்துள்ளது' என்று குறிப்பிட்டனர்.

வங்கிப் பிரிவில் வங்கியின் வெற்றி குறித்து நடுவர்கள் தமது கருத்தினை தெரிவிக்கையில்" இந்த அறிக்கையில் நிலைத்தன்மைக்கான வழிகாட்டும் கோட்பாடுகள் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவில்(SME) 50% பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNGC) மற்றும் நிலைத்தன்மை அபிவிருத்தி இலக்கு (SDG) களை உள்ளடக்கிய ஒரு சிறந்த நிலைத்தன்மை திட்டப்பணியாக இது உள்ளது. வர்த்தக மாதிரி சூழலியல், சமூக மற்றும் வழிநடத்தல் (ESG) பரிசீலனைகளை ஒருங்கிணைக்கிறது. தேசிய சுகாதார சேவைகள் மற்றும் கடற்கரைப் பாதுகாப்பு தொடர்பான சுற்றுச்சூழல் நிறுவனங்களுக்கான பங்களிப்பு தேசிய நல்வாழ்வுக்கான பெறுமதியாக்கப் பங்களிப்பாகும். ஊழியர்கள் நிலைத்தன்மை தேவைகளில் பயிற்சிக்கு உட்பட்டவர்களாகத் திகழ்கின்றனர்.

ACCA நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள் வருடாந்த அறிக்கைகளை அங்கீகரிக்கின்றன, அவை வர்த்தகத்தின் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை உள்ளக மற்றும் வெளியக பங்குதாரர்களுக்குத் தெளிவாக விளக்குகின்றன. நிலையான வளர்ச்சியின் இலக்கை நோக்கி நிறுவனத்தின் கொள்கைகள், இலக்குகள் மற்றும் நீண்ட கால நோக்கங்களை நிரூபிக்கின்றன.

# Zesta Tea இருபத்தைந்து வருட பூர்த்தியைக் கொண்டாடுகிறது



*Zesta Tea*, நாட்டின் தேநீர் பிரியர்களுக்கு முத்திரையிடப்பட்ட, உயர்தர மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய தேயிலையை அறிமுகப்படுத்திய இலங்கையின் முதல் வர்த்தக நாமம், தரம், சுவை மற்றும் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில் தனது 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இலங்கை தேயிலை தொழிலில் நிகரற்ற மேன்மை சமீபத்தில் கொண்டாடப்பட்டது.

*Zesta Tea* பிராண்டின் வரலாற்றில் ஒரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில் அண்மையில் *Zesta* இன் ஊழியர்கள் மற்றும் *Sunshine Holdings*இன் சிரேஷ்ட நிர்வாகத்தின் பங்கேற்புடன் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

புத்தாக்கம் மற்றும் அதிநவீனத்துடன் உயர்தர தேயிலையை இலங்கை சந்தைக்கு வழங்குவதற்கான நற்பெயருடன், *Zesta* 1998 ஆம் ஆண்டு முதல் தடவையாக இலங்கையர்களுக்கு 100% *Orange Pekoe Fannings (BOPF)*

*Orange Pekoe Fannings (BOPF)* தனித்துவமான கலவையை அறிமுகப்படுத்தியது, இது சர்வதேச சந்தைக்கு மாத்திரமே சிறந்த தேநீர் என்ற கருத்திற்குச் சவாலை ஏற்படுத்தியது.

பாரம்பரிய அணுகுமுறைகளில் இருந்து விலகி, துணிச்சலான புதிய உத்திகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் இதயங்களையும் மனதையும் நெருங்கி வருவதன் மூலம், இலங்கையர்களுக்கு மிக உயர்ந்த தரமான தேயிலையை வழங்குவதில் *Zesta* இன் வர்த்தக நாம அர்ப்பணிப்பு, அதைப் பிரபலமான வீட்டுப் பெயராக மாற்றியுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷ்யாம் சதாசிவம் கூறியதாவது: "இருபத்தைந்து ஆண்டுகளின் சிறப்பைக் கொண்டாடும் இந்த வேளையில், இந்த வெற்றிக்குப் பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1998 ஆம் ஆண்டு ஞுநளவய பிராண்டின் அறிமுகத்திற்கு முன்னோடியாக இருந்த மற்றும் *Zesta* பிராண்டை புதிய உயரத்திற்குத் தொடர்ந்து வழிநடத்திய விஷ் கோவிந்தசாமியின் ஈடு இணையற்ற தலைமைத்துவம் மற்றும் எங்கள் ஆர்வமுள்ள குழு மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர்களின் தளராத ஆதரவின் காரணமாக இந்த மைல்கல்லை எங்களால் எட்ட முடிந்தது." என அவர் தெரிவித்தார்.

# கருகும் மொட்டுக்கள்



நிஸ்னா அசாருதீன்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை.

விரைந்து ஓடிக் கொண்டிருக்கும் இந்த நவீனமயமான உலகில் மொட்டுக்களாய் பரிணமித்து மலர்ந்து மணம் பரப்பிடும் மலர்களைத் தண்ணீர் இன்றி கருகிவிட விடுவதில் என்ன தான் நியாயம் இருக்கிறது? இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், எதிர்காலத்தில் தான் இவ்வாறு வர வேண்டும் என்ற விதியைக் கடவுளிடம் கேட்டுப் பிறப்பதில்லை. மாறாக அக் குழந்தை வாழும், வளரும் சூழலே அக் குழந்தையை வெளி உலகிற்கு ஏதோ ஒரு நிலைக்கு ஆளாக்கி அனுப்பி வைக்கிறது. இந்த வகையிலேயே இப் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் வறுமை என்ற விதியையும் கேட்டுப் பெற்றா பிறக்கிறது என்பது குறித்து நாம் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம்.

ஆம், இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தளவில் வறுமை என்ற பெயரைக் காரணம் காட்டி சிறுவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இது உள்நாட்டில் மாத்திரம் அல்லாது, உலகளாவிய பிரச்சினையாகவும் இன்றைய பேசும்பொருளாகவும் இருந்து வருகிறது. சிறுவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடையில் நிறுத்தப்படுவதும், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதும், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப் படுவதும் இன்று எமது சமூகத்தில் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகிறது. அன்றாடம் ஊடகங்களிலிருந்து வெளிவரக் கூடிய செய்திகள் மூலமாக இவ்வாறான பல்வேறுபட்ட நிகழ்வுகளை நாம் நாளுக்கு நாள் பார்த்துக் கொண்டே வருகிறோம். இவற்றுக்குத் தீர்வு தான் என்ன? நாளைய உலகினை கையில் எடுத்து வழி நடாத்த இருக்கும் இம்மொட்டுக்கள் ஏன் வறுமை என்ற பெயர் கொண்டு கருக விடப்படுகிறார்கள்? என்பது குறித்து நாம் ஒவ்வொருவரும் எமது நெஞ்சைத் தட்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

உண்மையில் பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பானது மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. பெற்றோர்கள் சில நெறி பிறழ்வான விடயங்களைச் செய்து கொண்டு பிள்ளைகளை அதனை விட்டும் தடுக்க முனைவதானது ஓர் அசாத்தியமான நிகழ்வாக இருக்கிறது. உளவியலாளர்களின் கருத்துப்படி பிள்ளைகள் முதலாவதாக தமக்குரிய முன்மாதிரி ஆகப் பெற்றோரின் நடத்தைகளையே பின்பற்றுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது. குடும்பங்களுக்கிடையில் நிலவுகின்ற தனிப்பட்ட கோபங்களுக்காகவும் குரோதங்களுக்காகவும் சிறு பிள்ளைகள் பலிகடாவாகப்படுவதை அண்மைய சில துர்ப்பாக்கிய கரமான நிகழ்வுகளின் பின்னணி உறுதிப்படுத்தியிருப்பது வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

உலகளாவிய ரீதியில் இன்று மில்லியன் கணக்கான சிறுவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த சிறார்கள், பெற்றோராலும் குடும்பத்தவர்களாலும் கைவிடப்பட்ட நிலையிலும் இருக்கக் கூடிய சிறுவர்களுமே பெருமளவில் இவ்வாறான சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள். இதனால் அவர்களது கல்வியும், எதிர்காலமும் கேள்விக்குள்ளாகி அவர்களை ஒரு சுவருக்குள்ளேயே முடக்கி விடுகிறது.

சிறு பராயமானது கள்ளங்கபடமற்ற மகிழ்ச்சியானதும் கற்றறிந்து கொள்ளும் பருவமாகவும் கொள்ளப்படுகிறது. ஆகவேதான், சிறுவர்கள் கட்டாயம் பாடசாலை சென்று கல்வி கற்க வேண்டும் என்று எடுத்துரைக்கப்படுகிறது. இச் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நடைமுறையில் அவை கைகூடாமல் இருப்பதே உண்மை. வெயில், மழை பாராது, உண்ணவும் பருகவும் ஆகாரம் இன்றியும், அணியச் சீரான ஆடைகள் அற்றும் இன்று எத்தனையோ சிறுவர்கள் தமது வயதிலும் பார்க்க, தமது சக்திக்கு அப்பாற்பட்ட வேலைகளுக்கு அமர்த்தப்பட்டவர்களாக அவற்றையும் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

எனவே, தான் சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்குடனும் அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் 1954ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் அக்டோபர் 11ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் வலியுறுத்தியதற்கு இணங்க இன்று உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் 18 வயதிற்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு இருந்தது.

1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இச்சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களது கருத்துக்களுக்குச் செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் பங்கானது மகத்தானது தவிர அது மறுக்கப்படுவதற்கு இடமில்லை.

சிறுபிராயம் என்பது துள்ளித் திரிந்து பட்டாம்பூச்சிகளாய் இவ்வுலகை வலம் வரும் காலமாகும். காலங்கள் கடந்து செல்லும் போது அப் பருவத்தினை நினைத்தாலும் எட்ட முடியாத அளவிற்கு ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் இன்றி அமையாத ஒரு முக்கியமான பருவம் ஆக அது இருந்து வருகிறது. இன்று பெரியவர்களாக வளர்ந்து நிற்கும் நாம் அனைவரும் கடந்து வந்த பருவமாகவும் அது இருக்கிறது. இதில் மகிழ்ச்சியடையாத மற்றும் தமது கடந்த கால சிறு பிராயத்தினை நினைத்து இனிமையாக அசைபோடாத எவரும் இருக்கமாட்டார்கள் என்று தான் கூற வேண்டும்.

எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகைக் காப்பதற்குத் தயாராகும் பாதுகாவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்களே ஆவர். இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் முதுமொழிக்கு அமையச் சிறுவயதிலேயே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் பெருமளவில் தாக்கம் செலுத்துகிறது என்பதில் மறுப்பதிற்கில்லை. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவர்களை நல்வழிப்படுத்த உள்நாட்டு, சர்வதேச ரீதியாகப் பல நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்று சிறுவர்கள் தொடர்பான சட்ட ஒழுங்குகளை ஒவ்வொரு நாடும் கொண்டிருப்பது போன்று சர்வதேச ரீதியாகப் பல நிறுவனங்கள் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் அண்மைக் காலம் தொட்டு சிறுவர்களுக்கும், அவர்களது உரிமைகளுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டு வருவது கண்கூடு. அந்த வகையில் தனியார் நிறுவனங்கள் பலவும் அரச நிறுவனங்கள் பலவும் சிறுவர்களுக்கென பல செயற்றிட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.

சிறுவர்களுக்கென பாடசாலை ரீதியாக கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்கள் பாடசாலை சிறுவர்களுக்கு பல்வேறு பொருட்களை வழங்குவதுடன், சிறுவர் நிகழ்ச்சிகளை, விழிப்புணர்வு சார்ந்த விடயங்களை வானொலி, பத்திரிகை மூலம் வெளிப்படுத்துவதுடன் சிறுவர்களுக்குள் மறைந்து இருக்கின்ற திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சிறுவர் சஞ்சிகைகளை வெளியிடல் போன்ற நல்ல செயற்பாடுகளை எமது நாட்டில் நடாத்தி வருகின்றன. சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களும் அமைச்சு மட்டத்தில் திணைக்களங்களும் செயலாற்றி வருகின்றன. இதில் குறிப்பாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பங்கு மகத்தானது.

ஆனால், இவற்றையும் தாண்டி சிறுவர் துஷ்பிரயோகம் உலகமெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு துரதிர்ஷ்டமான நிலைமையாக உள்ளது.

இதனை இல்லாமல் ஒழிக்கப் பல நாடுகள் பல சட்டங்களைக் கொண்டு வந்தாலும் நடைமுறையில் அப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுவது என்பது சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு எவ்வளவுதான் முயற்சிகள் எடுத்த போதும் அவை அனைத்தையும் மீறிய செயற்பாடாகத்தான் தற்போது நிகழ்கின்ற வன்முறைகளும் அட்டூழியங்களும் காணப்படுகின்றன. அண்மைக்காலமாக இலங்கையிலும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது நம் அனைவரையும் தலை குனியச் செய்யும் விடயமாக இருந்து வருகிறது. இவ்வாறான பல வன்முறைகள் இன்று உலக அரங்கில் சிறுவர்களுக்கெதிராக நடைபெற்று வருவதை எம்மால் அவதானிக்க முடியும். எமது நாட்டிலும் கூட அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற சிறுபிள்ளைகளின் கடத்தல்கள் பாலியல் வல்லுறவு மற்றும் கொலைகள் பலவிதமான கேள்விகளை எழுப்பியுள்ள அதேவேளை, பெற்றோர்கள் மத்தியிலே ஒரு அச்ச உணர்வையும் உண்டாக்கியிருக்கிறது.

சகலருக்கும் சம வாய்ப்பு பற்றிய சிந்தனை துளிர் விட்டுள்ள இன்றைய காலகட்டத்தில் இந்த நாட்டில் வாழும் அனைத்து சிறுவர்களும் உள ஆரோக்கியமும், உடல் ஆரோக்கியமும் கொண்டு முழுமையாக வளர்ச்சிபெறச் சிறந்த போசாக்கு உணவும், நோய்ப் பாதுகாப்பும் சமூக வன்முறையிலிருந்து விடுதலையும், சிறந்த கல்வி அறிவும், பெறுபவர்களாக உறுதிப்படுத்துவது வளர்ந்தோர் அனைவரதும் பொறுப்பாகும். எனவே நாளைய தலைவர்களாக வரவேண்டிய இன்றைய இளம் சிறார்களை அவர்களைச் சுற்றியுள்ள பொறுப்பு தாரர்கள் அனைவரும் தத்தமக்குரிய விபாகத்தைச் சரிவர நிறைவேற்றி ஊக்குவிப்பார்களாயின் நிச்சயமாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சந்ததியை எதிர்பார்க்கலாம்.



# தகாத உறவால் குழந்தையை கொலை செய்த தாய்!

தனது தகாத உறவுக்கு இடையூறாக இருந்தது எனக்கூறி, தனது 11 மாத ஆண் குழந்தையை, பெற்ற தாயே கொலை செய்த சம்பவம் தமிழ் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

கடலூர் அருகே உள்ள வடக்கு மூளியூர் பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன். இவருக்கும், 19 வயதான பிரியா என்பருக்கும் திருமணமாகிய நிலையில், 11 மாதங்களேயான கலையரசன் என்ற ஆண் குழந்தை உள்ளது.

இந்நிலையில், அதே பகுதியை சேர்ந்தவர் 23 வயதான ஜெயசூர்யா என்பவருக்கும், பிரியாவுக்கும் இடையில் நட்பு ஏற்பட்டுள்ளது. இந்த நட்பு நாளடைவில் இருவருக்கும் இடையே தகாத உறவாக மாறியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிரியா திடீரென தனது குழந்தையுடன் காணாமல் போன நிலையில், அவரை கணவர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியில் ஜெயசூர்யாவுடன் மனைவி சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த இருவரையும் கண்டுபிடித்த குடும்பத்தினர், அவர்களிடம் குழந்தை இல்லாததைக் கண்டு அவர்களை பொலிஸில் ஒப்படைத்தனர். இந்நிலையில், பொலிஸாரின் தீவிர விசாரணைகளின் பின்னர், பிரியா மற்றும் ஜெயசூர்யா இருவரும், குழந்தையை கொலைசெய்தது தெரியவந்தது. மேலும், குழந்தையின் உடலை ஒரு சூட்கேசில் வைத்து திருச்சூர் ரயில் நிலையம் அருகே உள்ள ஓடையில் வீசியதாக இருவரும் தெரிவித்துள்ளனர்.



## இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# இன்று ஆரம்பிக்கிறது இருபதுக்கு-20 தொடர்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது சியல்ஹெட்டில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

இரண்டு மாதங்களில் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் இத்தொடர் முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகிறது.

குசல் பெரேரா காயமடைந்துள்ள நிலையில் அவிஷ்க பெர்ணாண்டோ அணியில் இடம்பெற்றால் அவர் தன்னை நிரூபிக்க வாய்ப்புக் கிடைக்குமென்பதுடன், கமிந்து மெண்டிஸும் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தி அணியில் நிரந்த இடத்தைப் பிடிக்க அழுத்தத்தை வழங்கலாம்.

தவிர முதலிரண்டு போட்டிகளிலும் தடை காரணமாக வனிடு ஹசரங்க இல்லாத நிலையில் சரித் அசலங்க தலைமைத்துவத்தில் தன்னை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது.

மறுபக்கமாக நீண்டகாலத்துக்குப் பின்னர் குழாமில் இடம்பெற்றுள்ள மஹ்மதுல்லா ஓட்டங்களைப் பெறுவதன் மூலம் தனதிடத்தை தொடரக்கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது.



# வாரணாசியில் மீண்டும் களமிறங்குகிறார் மோடி

இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கான பாஜக வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில், இந்தியப் பிரதமர் மோடி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

டெல்லியில் கடந்த 2 நாட்களாக பாஜக தலைவர்கள் வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பணியை தீவிரமாக மேற்கொண்டு வந்தனர். கடந்த 29ஆம் திகதி டெல்லியில் பாஜகவின் மத்திய தேர்தல் குழு கூட்டம் நடந்துள்ளது. பிரதமர் மோடி, பாஜக தேசிய தலைவர் ஜெபி நட்டா, அமித்ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், பாஜக முதலமைச்சர்கள், முக்கிய தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

பாஜகவின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது.

மொத்தம் 195 தொகுதிகளுக்கு வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் 34 மத்திய அமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

47 இளைஞர்களுக்கும் 28 பெண்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரணாசியில் தொகுதியில், பிரதமர் மோடி மூன்றாவது முறையாக களமிறங்கவுள்ளார்.

# இந்திய நடன கலைஞர் அமெரிக்காவில் சுட்டுக்கொலை


அமெரிக்காவின் மிசவுரி மாகாணத்தில் உள்ள வொஷிங்டன் பல்கலைகழகத்தில், முனைவர் கல்வி கற்று வந்த இந்திய நடன கலைஞர் அமர்நாத் கோஷ், சுட்டு கொல்லப்பட்டுள்ளார்.

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்தவர் 34 வயதான அமர்நாத் கோஷ்.

பரத நாட்டியம், குச்சிப்புடி உள்ளிட்ட இந்திய பாரம்பரிய நடனங்களில் தேர்ச்சி பெற்றவரான அமர்நாத் கோஷ், தன் நடனத்தில் முனைவர் பட்டம் பெறவேண்டி, அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார்.

அங்கு வொஷிங்டன் பல்கலைகழகத்தில் கற்று வந்த அவர், கடந்த சில தினங்களுக்கு முன்னர், இரவு வொஷிங்டனின் செயிண்ட் லூயிஸ் பயிலரங்கம் அருகே நடைபயிற்சி சென்று கொண்டிருந்ததார். அப்போது, அங்கு வந்த மர்ம நபர் அமர்நாத்தை தாக்கி கொலை செய்துள்ளார்.

இந்நிலையில், கொலை தொடர்பான விசாரணைகளை வொஷிங்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்"

ரஷ்யாவின் மக்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வரும் நிலையில், ரஷ்ய தம்பதியினர், அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், தனது மக்கள் பெரிய குடும்பங்களை வைத்திருக்க வேண்டும் என்றும் அதுவே நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்றும் என்றும் கூறினார். மேலும், ரஷ்யர்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையைத் தர தனது அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்த அவர், அப்படியே ரஷ்யா இப்போது எதிர்கொண்டு வரும் மக்கள் தொகை சிக்கல் குறித்தும் பேசினார்.

# SNOWFLAKEஇன் தலைமை அதிகாரியாக ஸ்ரீதர் ராமசாமி



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீதர் ராமசாமி, அமெரிக்காவைச் சேர்ந்த டேட்டா கிளவுட் நிறுவனமான ஸ்னோஃப்ளேக்கின் (SNOWFLAKE) தலைமைச் செயல் அதிகாரி மற்றும் இயக்குநர்கள் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்னோஃப்ளேக்கில் யுஐ இன் மூத்த துணைத் தலைவராக முன்பு பதவி வகித்த ராமசாமி, ஓய்வு பெற முடிவு செய்த ஃபிராங்க் ஸ்லூட்மேனுக்குப் பதிலாக, வாரியத்தின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி அவர் ஓய்வு பெற்ற நிலையில், புதிய சிஇஓ-வாக ஸ்ரீதர் ராமசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கூகுள் நிறுவனத்தில் 15 ஆண்டுகாலம் பணியாற்றிய ஸ்ரீதர், 2019ஆம் ஆண்டு நீவா நிறுவனத்தை தன் நண்பருடன் இணைந்து ஆரம்பித்தார். இந்நிறுவனத்தை 2023ஆம் ஆண்டு ஸ்னோஃபிளேக் நிறுவனம் கையகப்படுத்தியது. இதையடுத்து ஸ்னோஃபிளேக் நிறுவனத்தில் இணைந்த ராமசாமி அங்கு முக்கியமான தயாரிப்புகளை அறிமுகம் செய்தார்.



## முதலாவது டெஸ்டில்

# நியூசிலாந்தை வீழ்த்திய அவுஸ்திரேலியா

நியூசிலாந்துக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், வெலிங்டனில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

அவுஸ்திரேலியா: 383/10 (துடுப்பாட்டம்: கமரொான் கிறீன் ஆ.இ 174, மிற்செல் மார்ஷ் 40, உஸ்மான் கவாஜா 33, ஸ்டீவன் ஸ்மித் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 5/70, ஸ்கொட் குக்லஜின் 2/75, வில்லியம் ஓ'ருர்கே 2/87, றஷின் றவீந்திர 1/24)

நியூசிலாந்து: 179/10 (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 71, மற் ஹென்றி 42, டொம் பிளென்டல் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: நேதன் லையன் 4/43, ஜொஷ் ஹேசில்வூட் 2/55, மிற்செல் மார்ஷ் 1/10, பற் கமின்ஸ் 1/33, மிற்செல் ஸ்டார்க் 1/34)

அவுஸ்திரேலியா: 164/10 (துடுப்பாட்டம்: நேதன் லையன் 41, கமரொான் கிறீன் 34, ட்ரெவிஸ் ஹெட் 29, உஸ்மான் கவாஜா 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிளென் பிலிப்ஸ் 5/45, மற் ஹென்றி 3/36, டிம் சௌதி 2/46)

நியூசிலாந்து: 196/10 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 59, டரைல் மிற்செல் 38, ஸ்கொட் குக்லஜின் 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: நேதன் லையன் 6/65, ஜொஷ் ஹேசில்வூட் 2/20, ட்ரெவிஸ் ஹெட் 1/10, கமரொான் கிறீன் 1/16)

போட்டியின் நாயகன்: கமரொான் கிறீன்

## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சமநிலையில் மட்ரிட்–வலென்சியா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், வலென்சியாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் சமப்படுத்தியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் வின்ஷியஸ் ஜூனியர் பெற்றதோடு, வலென்சியா சார்பாக ஹியூகோ டுரோ, றோமன் யரெம்சுக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

லா லிகா புள்ளிகள் தரவரிசையில் 66 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. 59 புள்ளிகளுடன் ஜிரோனா இரண்டாமிடத்திலும், 57 புள்ளிகளுடன் பார்சிலோனா மூன்றாமிடத்திலும், 52 புள்ளிகளுடன் அத்லெட்டிகோ மட்ரிட் நான்காமிடத்திலுள்ளது. இதில் றியல் மட்ரிட் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



## இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடர்:

# சமநிலையில் செல்சி–பிரென்ஃபோர்ட் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிரென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

செல்சி சார்பாக, நிக்கலஸ் ஜக்சன், அக்ஸெல் டியஸாய் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிரென்ஃபோர்ட் சார்பாக மட்ஸ் றொஸெர்லெவ், யோனே விஸ்ஸா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. யுனைட்டெட் சார்பாக கேர்ட் ஸூமா, தோமஸ் சூசெக், எட்ஸன் அல்வரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெட்டோ பெற்றிருந்தார்.



பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 58 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஆர்சனலும், 55 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் சிற்றி, ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 04 மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.